










துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.9.2025) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் சேக்கிழார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் 8.24 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 7.43 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 7,297 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் உள்ளிட்ட 362.55 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - மாநகர-ஒன்றிய-நகர-பகுதி-பேரூர்ச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, செப்.12-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நேற்று முன்தினம் (10.09.2025 - புதன்கிழமை) அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் என்.நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என்.பி.துரை,த.ஜீவா, எம்.சேக்மீரான் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், தமிழ்நாடு மாநில இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும், வெளிநாடு முதலீடு களை ஈர்ப்பதற்காக ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரூ. 15.516 கோடி மதிப்பீட்டில் முதலீடுகளைப் பெற்று அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்கி உள்ளார். மேலும் லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்தார். சுயமரியாதை இயக்கத்தை போற்றியும், பெரியாரை போற்றியும், அன்னிய முதலீடுகளையும் பெற்று தந்த நம் திராவிட மாடல் நாயகர், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மனமார்ந்த நன்றியினையும், நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

2025ம் ஆண்டு செப்டம்பர் 17ம் நாள் கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் பெரியார் விருதினை பெற இருக்கும் கழக துணை பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்ற குழு தலைவரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி, அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

“ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளிலும் 40 சதவீத இலக்கை அடைய முழு ஒத்துழைப்பு நல்கிய மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், பாக முகவர்கள், பாக டிஜிட்டல் ஏஜென்ட் மற்றும் சார்பு அணியினருக்கும், கழக தோழர்களுக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

செப்டம்பர் 15 அன்று அறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு வடசேரியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு காலை 9.00 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன், அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கும், தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியாரின் திருவுருவப் படத்திற்கும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வாக்குச் சாவடிகளிலும் உறுப்பினராக இணைந்த குடும்பங்களை அழைத்து BLA2, BDA, BLC க்களின் கூட்டத்தை நடத்திட உறுதிமொழி எடுக்க வேண்டும் எனவும், அன்று மதியம் நாகர்கோவில், தேரேகால்புதூர், கெங்கா கிராண்ட்யுர், திருமண மண்டபத்தில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. அந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கழக நாடாளுமன்ற குழு தலைவரும், கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்க உள்ளதால் அனைத்து பாக முகவர்களையும் கலந்து கொள்ள செய்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் செப்டம்பர் 20ம் தேதி “ஓரணியில் தமிழ்நாடு” பொதுக்கூட்டம் நடத்திட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

17.09.2025 அன்று காலையில் கரூர், கோடாங்கிபட்டி பகுதியில் வைத்து கழகத்தின் முப்பெரும் விழா மிகவும் எழுச்சியுடன் நடைபெற உள்ளதையடுத்து நமது கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தினர் பெருமளவில் கலந்து கொள்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் என்.நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், என்.பி.துரை, த.ஜீவா, எம்.சேக்மீரான் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்புவனம், மானாமதுரையில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!

சிவகங்கை, செப்.12-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் பரமக்குடியில் இமானுவேல் நினைவிடத்திற்கு மரியாதை செலுத்துவதற்காக மதுரையிலிருந்து கார் மூலம் பரமக்குடி சென்றார் பரமக்குடி செல்லும் வழியில் சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் முன்பாகவும் மானாமதுரை புதிய பேருந்து நிலையம் முன்பாக மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைப்பில் உற்சாகமான சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருப்புவனத்தில் துணை முதல்வரை மாவட்டச் செயலாளர், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பட்டு வேட்டி புத்தகங்கள் கொடுத்து முதலில் வரவேற்றார். அவரைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன் எஸ். மாரியப்பன் கென்னடி, மாவட்ட கழக துணை செயலாளர்கள்த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார்,

ஒன்றிய கழக செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், சுப்பிரமணியன், எம் .ஏ.கடம்ப சாமி ,துரை .ராஜாமணி, எம். அண்ணாதுரை, அ.முத்துசாமி, எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம் , வே.தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், வே.ஆரோக்கியசாமி, யோக.கிருஸ்ணகுமார், பெ.மந்தக்காளை, ஆர்.எம். கென்னடி, நகர் கழக செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, சி.எம்.துரை.ஆனந்த், பெரி.பாலா, மாநகர செயலாளர்கள் ந.குணசேகரன், மாநகர மேயர் எஸ்.முத்துதுரை,

மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், மானாமதுரை நகர் மன்ற துணை தலைவர் பாலா சுந்தர், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, நிர்வாகிகள் அண்ணாமலை, ஈஸ்வரன், அச்சன்குளம் முருகன், ரவிச்சந்திரன், மாணவரணி கார்த்தி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதாஅணாணாதுரை, பாஸ்கரன், மூர்த்தி, அழகையா, அன்புசெல்வன், காளிமுத்து, சுப.தமிழரசன், பேரூர் கழக செயலாளர் பி.ஏ. நஜ்மூதீன் ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், வரவேற்றார்கள்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் பரமக்குடிக்கு புறப்பட்டுச் சென்றார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

**செப்டம்பர் 12 (2019)**



வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களின் ஒருவர்.

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பிராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**